**செய்தி வெளியீடு எண்: 035** **நாள்: 10.01.2018**

# செய்தி வெளியீடு

திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கி வரும் ஸ்ரீநிகேதன் பள்ளிக் குழுமம் மாணவர்கள், சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் வழியாக ஆர்வார்ட் பல்கலைக் கழக தமிழ் இருக்கைக்காக ரூபாய் 7,50,000/–த்தை உலக தமிழாராய்ச்சி நிறுவன ஆளுகைக் குழுத் தலைவர் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன்அவர்களிடத்தில் அளித்து தங்களது தமிழ் பற்றினை வெளிபடுத்தினர்.

இத்தொகையினை மாணவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஒருமாத காலமாக சேர்த்தனர். இவர்களுடன் ஆசிரியப் பெருமக்களும், அலுவலக ஊழியர்களும், பள்ளி நிர்வாகமும் இணைந்து சேமித்த தொகையாகும்.

இத்தொகையினை மாணவர்கள் நேரடியாக மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர்அவர்களிடம் இன்று (10.01.2018) தலைமைச் செயலகத்தில் காசோலையாக அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில், பள்ளிக் குழு தாளாளர் திரு. விஷ்ணுசரண் மற்றும் இயக்குநர் திரு. பரணிதரன், தமிழ் ஆசிரியர் திரு. செந்தில்குமார் ஆகியோர் மாணவர்களுடன் இணைந்து இத்தொகையினை வழங்கினர்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் திரு. கோ. விசயராகவன், மொழி பெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் திரு. அருள் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**